2010 ஏப்ரல் 15]

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. கலைராஜன் அவர்கள் கடுமையான சில வார்த்தைகளைப் பேசியதால் அதனுடைய விளைவாக (குறுக்கீடுகள்) நான் சொல்வதை, சொல்லியதற்குப் பின்னர் நீங்கள் மறுக்கலாம். அந்த வார்த்தைகளுக்குப் பதிலாக மாண்புமிகு அமைச்சர் துரைமுருகன் அவர்களும் ஒரு வார்த்தையைச் சொன்னதால், இந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலே இருக்கக்கூடாது என்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து, அவை நீக்கப்பட்டன. இந்த அவையில் இரண்டு பேர் பேசிய வார்த்தைகளும் அன்றைக்கே நீக்கப்பட்டன. அன்றைக்கே நீக்கப்பட்ட காரணத்தால், அதை இன்றையதினம் எடுத்துக் கூறுவதற்கு எந்த நியாயமும் கிடையாது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடுகள்) நீங்கள்தான் சொல்லிவிட்டீர்களே? அதைப்பற்றித்தானே? (குறுக்கீடுகள்) சரி, என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடம் பொறுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன். (குறுக்கீடுகள்)

(ஆ) கரும்புக்குக் கொள்முதல் விலை வழங்குவது பற்றி அவையில் 12-4-2010 அன்று வேளாண்மைத் துறை அமைச்சர் தெரிவித்தது குறித்த முன்னறிவிப்பு

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12-4-2010 அன்று மானியக் கோரிக்கை விவாதத்தில் பேசிய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், கரும்புக்கு மத்திய அரசு நிர்ணயித்த ஆதார விலை 740 ரூபாயைவிட ஒரு பைசாகூட... (குறுக்கீடு)

(அ) உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜனை அவையில் 13-4-2010 அன்று சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவதூறாகப் பேசியதாகத் தெரிவித்து அளிக்கப்பட்ட முன்னறிவிப்பு—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தெரியாமல்தான் கேட்கிறேன்; ஓர் உறுப்பினர் அவருடைய இருக்கையைவிட்டு எழுந்து வந்து மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பார்த்து கையைக் காட்டி மிரட்டிப் பேசுகிறார். இதைப் பார்த்துக்கொண்டு நீங்கள் சும்மா

இருக்கிறீர்கள் என்றால், எங்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? இது இந்த அவையினுடைய உரிமையை மீறிய செயல். அப்படி நடந்துகொள்கிற அந்த உறுப்பினர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது விஷயமாக (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள் உட்காருங்கள். உறுப்பினருடைய நடவடிக்கையைப் பார்த்து நான் எச்சரித்தாகிவிட்டது. இதற்கு மேல் நான் வேறு நடவடிக்கைதான் எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) உறுப்பினரை உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லியாகிவிட்டது, அமைச்சர் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: இதில் உங்கள் தீர்ப்பை நான் எதிர்பார்க்கின்றேன். மீண்டும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் தொடரக்கூடாது. எனவே, இறுதியாக இதன்மீது உங்கள் தீர்ப்பை எதிர்பார்க்கின்றேன். அவர்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கோருகிறேன்.

முற்பகல் 10-50

(ஆ) கரும்புக்குக் கொள்முதல் விலை வழங்குவது பற்றி அவையில் 12-4-2010 அன்று வேளாண்மைத் துறை அமைச்சர் தெரிவித்தது குறித்த முன்னறிவிப்பு—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லியாகிவிட்டது இல்லையா? (குறுக்கீடு) அதுவும் கரும்பு விலை சம்பந்தப்பட்டதுதானே?

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இல்லை. பில் எல்லாம் இருக்கிறது என்னிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, கரும்பு விலை சம்பந்தப்பட்டதுதானே?

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: இல்லை, ஒரு நிமிடம் கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) என்னிடம் காலையில்தான் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) 9-15 மணிக்குக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறீர்கள். அதற்கு, பிறகு நாங்கள் உரிய நடவடிக்கை எடுப்போம். பொறுங்கள். (குறுக்கீடு) நீங்கள் கொடுத்தவுடனே எடுக்க

2010 ஏப்ரல் 15] [பேரவைத் தலைவர்]

வேண்டும் என்று இல்லை. நானும் அதைப் பார்க்க வேண்டாமா? (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்திருப்பது ஆய்வில் இருக்கிறது.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: நான் raise பண்ண வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஏற்கெனவே எழுத்துமூலமாகக் கொடுத்ததற்குப் பிறகு (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

(அ) உறுப்பினர் திரு. வி.பி. கலைராஜனை அவையில் 13-4-2010 அன்று சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவதூறாகப் பேசியதாகத் தெரிவித்து அளிக்கப்பட்ட முன்னறிவிப்பு—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: Hon'ble Speaker Sir, நான் ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறேன். அந்தப் பிரச்சினையை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதுகுறித்து உங்களுடைய தீர்ப்பை எதிர்பார்க்கிறேன் என்று சொல்லி நான் அமர்ந்திருக்கிறேன். தீர்ப்பு என்ன என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், அவர் தனது இருக்கையை விட்டு வந்தார். வந்தவரை நான் எச்சரித்து அனுப்பியிருக்கிறேன். இனி அதுமாதிரி தொடரக் கூடாது என்று சொல்லியிருக்கிறேன். இதை மீறினார் என்றால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். (குறுக்கீடு)

(ஆ) கரும்புக்குக் கொள்முதல் விலை வழங்குவது பற்றி அவையில் 12-4-2010 அன்று வேளாண்மைத் துறை அமைச்சர் தெரிவித்தது குறித்த முன்னறிவிப்பு—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், நீங்கள் காலையில் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. நான் பதில் சொன்னதற்குப் பிறகு நீங்கள் raise பண்ணினால் போதும். (குறுக்கீடு) இன்னும் என்ன பதிவு பண்ண வேண்டும்? (குறுக்கீடு) என்னிடம்தான் கொடுத்திருக்கிறீர்கள் இல்லையா? (குறுக்கீடு) என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். கொடுத்தது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. இன்று காலை 9-15 மணிக்குக் கொடுத்திருக்கிறீர்கள். நான் ஆய்வில் இருக்கிறது

[பேரவைத் தலைவர்] [2010 ஏப்ரல் 15

என்று சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகும் நீங்கள் சபையில் எழுந்து கேட்டுக் கொண்டிருந்தால் என்ன பண்ணுவது? நான் அனுமதி கொடுத்ததற்குப் பிறகு இது சம்பந்தமாக நீங்கள் பேசலாம். (குறுக்கீடு) அடுத்த matter எடுக்க வேண்டும். (குறுக்கீடு) இப்படி எழுந்து நின்றால் நான் எப்படி சபையை நடத்த முடியும்? (குறுக்கீடு) நான் சொல்லியாகிவிட்டது. திரும்பத் திரும்ப சொன்னதற்குப் பிறகும், நீங்கள் நின்றீர்கள் என்றால் எப்படி? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் ஒரு சந்தேகத்தை இங்கே எழுப்புகிறார். எழுப்புவதற்கு அவருக்கு உரிமை உண்டு. ஆனால் காலையில்தான் அவர்கள் இதைத் தங்களிடம் எழுதிக் கொடுத்தார் என்றீர்கள். அவர் என்ன எழுதிக் கொடுத்தாரோ அதைப் பற்றி விளக்கம் சொல்வதற்கு அமைச்சருக்கு அவகாசம் வேண்டும். அது அமைச்சருக்குப் போக வேண்டும். அமைச்சரும் அவையில் இல்லை. அவர் எழுதிக் கொடுத்ததை வேளாண்மைத் துறை அமைச்சரிடம் கொடுங்கள். அவகாசம் எடுத்து நாளைக்கு வந்து அவர் பதில் சொல்லட்டும். கேள்வி கேட்கிற உரிமை உங்களுக்கு உண்டு. நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. சந்தேகத்தைக் கேட்பதற்கு உரிமை உண்டு. (குறுக்கீடு) நீங்களே சொல்லுங்கள். நீங்கள் அமைச்சராக இருந்தவர். என்ன கேட்கிறார்கள் என்று அமைச்சருக்குத் தெரிய வேண்டாமா? இரண்டாவது, அமைச்சர் இங்கே இல்லை. ஆகையினால் நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம். அது ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், நீங்கள் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அமைச்சரிடம் அதற்கான விளக்கங்களைக் கேட்டுவிட்டு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ எடுப்போம். உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு பின்னர் வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

(இ) சென்னை, அஷோக் நகரில் நடைபெற்ற கொலை, கொள்ளைச் சம்பவக் குற்றவாளிகள் கைது

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அஷோக் நகரில் முன்னாள் TAMIN Chairman சரவணன் அவர்கள்

2010 ஏப்ரல் 15]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே அமைச்சர்களாக இருந்தவர்களெல்லாம் இங்கே இருக்கிறீர்கள். பாராட்டு விழா என்பது சாதாரணமாக நடப்பதல்ல. சொல்லி வைத்துக்கொண்டே zero hour-லே வரிசை ஆரம்பத்திலிருந்து கடைசி வரை பாராட்டிய காலங்களெல்லாம் உண்டு. அதுபோல உங்களுக்குத் தெரிந்த குறைகளை மட்டுமே சொல்லவேண்டியது என்பது சட்டமன்ற மரபு அல்ல. அவர் நடைபெற்றிருக்கிற நிறைகளைப் பற்றி எடுத்துச் சொல்வதில் என்ன தவறு? அதை அவர் சொல்லட்டும். (குறுக்கீடு)

(ஆ) கரும்புக்குக் கொள்முதல் விலை வழங்குவது பற்றி அவையில் 12-4-2010 அன்று வேளாண்மைத் துறை அமைச்சர் தெரிவித்தது குறித்த முன்னறிவிப்பு—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. செங்கோட்டையன், இன்றைக்கு இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் நடத்த வேண்டியிருக்கிறது. கொஞ்சம் அமைதியாக எனக்கு co-operate பண்ணுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மைக் செயல்படுகிறது. பேசுங்கள், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மைக் செயல்படுகிறது. பேசுங்கள்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் பேசுகிறபோது அவர் உங்களிடத்திலே 'mention' செய்வதாகச் சொன்னார். அவையின் மரபுபடி zero hour-ன்போது எங்களுடைய பிரச்சினைகள், தமிழ்நாட்டிலிருக்கிற பிரச்சினைகள், எங்கள் கட்சியின்மீது சுமத்தப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்வது அவசியம். கரும்பிற்கு உரிய விலை உங்கள் ஆட்சியிலே கொடுக்கப்படவில்லை என்று அமைச்சர் சொல்கிறபோது, அதைக்கூட எங்களால் 'mention' பண்ணமுடியவில்லை என்று சொன்னால், எதைத்தான் சட்டமன்றத்திலே எங்களால் 'mention' செய்யமுடியும் என்பதை உங்கள் மூலமாக நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம். அதற்கும் வாய்ப்புக் கொடுக்கவில்லையென்றால், எப்படி?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எழுத்து மூலமாக என்னிடம் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) நீங்கள் எந்த சப்ஜெக்டைச் சொல்ல வருகிறீர்கள் என்பது அதில் இருக்கிறது. அது ஆய்விலே இருக்கிறது முடிவை நாளைக்கு பார்த்துக்

கொள்வோம். அவர் சொன்னதற்குப் பிறகு பேசுங்கள் என்று சொல்கிறேன். திரு. சுதர்சனம் அவர்கள் சொல்ல வருவது புதிய விஷயம். அவர் புதியதாக ஒரு விஷயம் சொல்ல வருகிறார். அதைச் சொல்வதற்கு அனுமதி கொடுத்திருக்கிறேன். என்னுடைய ஆய்வுக்கு முன்னாலேயே நீங்கள் அதைப் பேசி இந்த அவையிலே பதிய வைக்கவேண்டுமென்று நினைப்பது முடியாத காரியம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், பேரவைத் தலைவருடைய முடிவுக்கு இந்த அவை கட்டுப்பட்டது. அந்த முடிவுக்கு கட்டுப்பட்ட இந்த அவையில் பேரவைத் தலைவர் "ஒரு பிரச்சினையை ஆய்வில் வைத்திருக்கிறேன்" என்று சொன்னால், எத்தனை நாள் வேண்டுமானாலும் ஆய்வில் வைத்திருக்கலாம். ஆனால் அதன் முடிவைக் கேட்கின்ற உரிமை உங்களுக்கு உண்டு. எப்போது எழுப்பலாம் என்றால், குறிப்பிட்ட நாட்களுக்குப் பின்னால் கேட்கலாமே தவிர, இன்றைக்கே முடிவு என்ன என்று கேட்டால், ஆய்வு நடத்துவதற்கு முன்னர் அந்த முடிவைச் சொல்ல முடியாது. ஆய்வு நடத்தி இந்த அவையில் அவைத் தலைவர் அந்த முடிவை அறிவிப்பார்.

முற்பகல் *11-00*

(இ) சென்னை, அஷோக் நகரில் நடைபெற்ற கொலை, கொள்ளைச் சம்பவக் குற்றவாளிகள் கைது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம். (குறுக்கீடுகள்) நான் திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருக்கத் தயாராக இல்லை. திரு. டி. சுதர்சனம், பேசுங்கள்.

திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உங்களிடத்திலே எழுந்து நின்று அனுமதி கேட்டேன். நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் சப்ஜெக்டுக்குப் போங்கள், அதை விடுங்கள். (குறுக்கீடு) சப்ஜெக்டுக்குள் போங்கள்.

திரு. டி. சுதர்சனம்: என்னுடைய கருத்தைச் சொல்வதற்கு எனக்கு உரிமை உண்டு. அதை மறுப்பதற்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கோ அல்லது எதிர்க்கட்சி கொறடாவிற்கோ,